**Previous Examination date – 12.08.2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 190 of 2019**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : ரஞ்சித்குமார்** | **Father/Husband's Name : ராசு** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 06.07.2026.**

**(This evidence is recorded through Video Conference by using Terms Application. The witness is identified by police. The Witness is directed to download this deposition and to get signed by the witness shall be returned to this court through post and the scanned and signed deposition shall be sent to the Court's E-mail ID)**

**A1 present. A2, A3 absent. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சென்னை மயிலாப்பூர் குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2018ம் வருடம் பழனி நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது 22.10.2018ம் தேதி 15.00 மணிக்கு பழனி நகர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது பழனி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அயன்சாமி என்பவரை விசாரித்து கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அன்றே 15.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய பழனி நகர் காவல்நிலைய கு.எண்.580/2018 பிரிவுகள் 294(b),323,506(1) இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல்தகவல்அறிக்கை நான் தயார் செய்தது தான். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையும் இணைத்து பழனி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 22.10.2018ம் தேதி 17.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மயில்சாமி, துரைராஜ் ஆகியோர் முன்னிலையில்

சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் அயன்சாமி, பூமதி, கருப்புச்சாமி, அனுபிரியா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் 22.10.2018ம் தேதி 18.00 மணிக்கு பழனி பஸ் நிலையம் திண்டுக்கல் ரேக் அருகில் இருந்த எதிரி கோபால்சாமி என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து உச்ச நீதிமன்ற கட்டளையை கடை பிடித்து 18.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து திரேக சோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து பின்பு தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். மேலும் காயம்பட்ட அயன்சாமி, பூமதி ஆகியோருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் முகைதீன் நௌசத் கனி என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பட்டியல் சாட்சி 1,2 க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச் சான்றளித்துள்ளார். எதிரிகள் அருண் மற்றும் முத்துலட்சுமி முன்பிணை பெற்றதால் கைது செய்யப்படவில்லை. பின்பு வழக்கின் விசாரணை முடித்து 1,2 எதிரிகள் மீது பிரிவுகள் 294(b),323,506(1) இ.த.சவின் கீழ் , 3ம் எதிரி மீது 294(b),506(1) இ.த.சவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. சொத்து பிரச்சனையால் ஏற்பட்ட குற்ற வழக்கு என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவயிடமானது 1ம் எதிரி கோபால்சாமி அ.சா.1ன் தகப்பனார் நாச்சிமுத்து என்பவரிடம் இருந்து கிரயம் பெற்று அனுபவித்து வந்த சொத்து என்றால் அ.சா.1ன் தந்தையிடம் இருந்து கிரயம் எழுதி வாங்கிய சொத்து தான் ஆனால் 1ம் எதிரி அனுபவிக்கவில்லை, உரிமையியல் வழக்கு நிலுவையில் இருந்தது. அ.சா.1 வாய்மொழியாக புகார் வாக்குமூலம் தான் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 இந்த வழக்கில் எழுத்து மூலமான புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 4ல் தகவலின் வகை எழுத்துமூலமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 5ல் குறிப்பிடபட்டுள்ள கலிக்கநாயக்கன்பட்டியில் உள்ள வாதியின் தோட்டம் என்று சொல்லியுள்ளதை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல்

செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை காலம் 14ல் புகார்தாரரின் கையொப்பம் அல்லது கைரேகை பெறப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 15ல் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கத்தி, தடி போன்ற சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி கோபால்சாமி என்பவர் அ.சா.1 மற்றும் அ.சா.2ன் மீது பழனி நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு குற்ற எண்.581/2018 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். குற்ற எண்.581/2018 என்ற வழக்கு என்னால் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். குற்ற எண்.581/2018 என்ற வழக்கில் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது காவல் நிலைய ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். இந்த வழக்கில் இறுதியறிக்கை 100 நாட்கள் கழித்து தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதியறிக்கை காலம் 6ல் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான், அது M.F செய்த வழக்கில் தான் குறிப்பிடப்படும், இந்த வழக்கில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறுதியறிக்கை காலம் 11ல் XIV, XV ல் தேதி குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 2 மற்றும் 3வது எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றால் சரிதான். இறுதியறிக்கை காலம் 11 வரிசை எண்.2,3ல் XIII ல் கைது செய்த நாள் 14.11.2018 என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எதிரிகள் முன்பிணை பெற்ற தேதி. இறுதியறிக்கை மற்றும் முதல் தகவல் அறிக்கையில் எனது கையொப்பம் வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. இறுதியறிக்கையில் சாட்சி பட்டியல் எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 அயன்சாமியின் புகார் வாக்குமூலம் பதிவு செய்த தேதி குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். முகைதீன் நௌசத்கனி என்ற மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்த தேதி குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் பூமதி, கருப்புச்சாமி, அனுபிரியா, மயில்சாமி, துரைராஜ் ஆகியோர்கள் 22.10.2018ம் தேதி விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் பூமதி, கருப்புச்சாமி, அனுபிரியா, மயில்சாமி, துரைராஜ் ஆகியோர்களை எந்த இடத்தில் வைத்து எந்த நேரத்தில் விசாரித்தேன் என்று சொல்ல முடியுமா என்றால் பூமிதியும், கருப்புச்சாமி பழனி அரசு மருத்துவமனையிலும், அனுபிரியா பழனி நகர் காவல் நிலையத்திலும், மயில்சாமி,

துரைராஜ் ஆகியோரை சம்பவயிடத்திலும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது, நேரம் குறிப்பிடபடவில்லை. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சம்பவயிடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை பட்டியல் சாட்சி 5 மற்றும் 6 ஆகியோர்களின் தோட்டத்தில் வைத்து தயார் செய்து அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சம்பவயிட தோட்டத்தில் வைத்து கையொப்பம் வாங்கினேன். ஆவணங்களும், சாட்சிகளும் இந்த வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இறுதியறிக்கையில் சொல்லியுள்ள சம்பவத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை முறையாக புலன் விசாரணை செய்யாமல் அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு ஆதரவாக 1ம் எதிரி அ.சா.1ன் அப்பா நாச்சிமுத்துவிடம் வாங்கிய நிலத்தை அபகரித்து அ.சா.1க்கு கொடுப்பதற்காகவும் இந்த வழக்கின் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.06 18:00:36 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.